முருகப்பெருமான் துணை

**மகான் திருமூல நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.11.2023,** புதன்கிழமை

1. மாதவ மூர்த்தியே அரங்கா
மண்ணுலகில் அற்புதம் படைக்க
மாதவசியாக வந்தநல் அரங்கா
மகானுன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது துலைதிங்கள்
குறைவிலா மூவை திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 15 ம் நாள், 01.11.2023, புதன்கிழமை)
அறிவுரை ஆசி திருமூல நாயனாரும்
அறிவிப்பேன் உலகநலம் பெற
3. நலம்தரும் அரங்க மகானின்
ஞான வழி கடைபிடித்து
வலம்வர பிரணவக் குடிலை
வணங்கி அரங்கனிடம் தீட்சை
4. தீட்சை வரம் பெற்றுவிட
தீட்டெனும் மும்மலக் குற்றங்கள்
கட்டமான கரும வினைகளும்
கரைந்தோடி ஞான பலமாகும்
5. பலமான பாதுகாப்புக் கூடி
பண்பான பரிபக்குவம் நிறைந்த
சலனமிலா ஞானவான்களாக
சற்குரு நிழலில் சகல வளமும்
6. வளமும் வரமும் பல அடைவர்
வாழ்க்கை தீவழிச் செல்லா
இலக்கே பிறவி கடக்கின்ற
இறை வழியே என திடமும் கூடி

7. கூடியே சூட்சுமம் பலகண்டு
குருவருளே திருவருள் காட்டும்
தடையிலா மார்க்கமென தெளிந்து
தானதரும அரங்கன் நெறி பிறழா

8. நெறிபிறழா வாழ்ந்து நன்கு
நிலவுலகை காக்கின்ற
அறிவு ஞானம் நிறைந்த
அதிகார ஆளுமை பலமும் கண்டு

9. கண்டுமே உலக சேமத்தில்
கடமைபல ஆற்றி நன்கு
தொண்டு வழி அரங்கன் சீடராக
தெய்வநிலை கண்டுத் தேறி

10. தேறியே ஞானத்தலைமை
தேசமெல்லாம் அமைய படைப்பர்
வறுமை பசிபிணிக் கொடுமை
வையகம் விட்டு அகலவே

11. அகலவே தரும ஞான ஆட்சி
அடிப்படை தேவை பூர்த்திபட
மகான்கள் ஆட்சிதனை நிறுவுவர்
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–